# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No.122/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw9/ Pw7 |
| Name | : Dr.Sivamalar |
| Father/Husband's Name | : Selvaraj |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.01.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது உதவி பேராசிரியராக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.03.2020 அன்று குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணியிலிருந்தபோது, இரவு 11.00 மணியளவில் பாபுவின் அம்மா, அவர்கள் பாபு என்பவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்தவரை, அவசர சிகிச்சை பிரிவில் அவருக்கு நான் மருத்துவம் பார்த்தேன். அப்போது, பாபு நல்ல மனநிலையிலும், சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு 2 தெரிந்த நபர்கள் கட்டையால் தலை, நெஞ்சு, மூக்கு பகுதியில் அடித்ததாகவும், கழுத்தை நெரித்தாகவும் அதனால் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். மேற்படி சம்பவம் இரவு 9.00 மணியளவில் அவர் தங்கியிருந்த இடத்தில் நடைபெற்றதாக தெரிவித்தார். அவருக்கு தலையில் அடித்து காயம் ஏற்பட்டதால், மயக்கமாக இருப்பதாக சொன்னார். நான் அவரை பரிசோதனை செய்ததில், சுயநினைவுடன் இருந்தார். மூக்கிலிருந்து ரத்தம் வந்துகொண்டிருந்தது. இடது கண்ணின் கீழ் பகுதியில் நான் சிகிச்சை செய்தபோது, அவர் வலி இருந்ததாக சொன்னார். நான் அவருக்கு தலைக்கு சிடி ஸ்கேன் எடுக்கவும், கழுத்து எலும்பிற்கு X-ray எடுக்கவும் அறிவுறுத்தினேன். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு டிடி ஊசியும், வலி ஊசியும் கொடுத்துவிட்டு,

எலும்பு அறுவை மருத்துவரை ஆலோசனை செய்ய சொல்லி இருந்தேன். 23.10.2020ம் தேதி நான் மேற்சொன்ன பாபுவிற்கு அவரை பரிசோதனை செய்து காய சான்று வழங்கினேன். அதில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு கூடிய காயச்சான்று **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

இது சட்டம் சார்ந்த மருத்துவ வழக்கு என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்பட்டது ஆனால் பதிவேட்டில் குறிப்பிடவில்லை. நோயாளியை பரிசோதனை செய்தபோது, அவர் என்ன சொல்லிகிறாரோ அதை எழுதிவிட்டு நாங்கள் நேரிடையாக பரிசோதனை செய்யும் போது, என்ன காயங்கள் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்வோம் என்றால் சரிதான். என்னிடம் சிகிச்சைக்காக வந்த நபர் தன்னை கட்டையால் தலையிலும், மார்பு பகுதியிலும், சொன்னார். ஆனால் அவரை பரிசோதித்த போது, தலையிலும், மார்பு பகுதியிலும் எந்த விதமான காயமோ, வலியோ இல்லை. சாதாரணமாக கட்டையால் மூக்கில் அடித்தால், சிரைப்பு காயம் ஏற்படும். அவ்வாறு என்னிடம் சிகிச்சை பெற்ற நபருக்கு சிரைப்பு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு சான்றிதழில் குறிப்பிடபடவில்லை. பொய்யாக எதிரிகள் மீது பழி போடுவதற்காக பாசாங்கு செய்பவருக்கு shamming or malingering என்ற நோய் உள்ளது என்றால் சரிதான். ஒருவர் வலி இருப்பதாக பாசாங்கு செய்திருக்கலாம் என்றால் சரிதான். என்னிடம் சிகிச்சை பெற்ற நபருக்கு உள்நோயாளியாக சிகிச்சை பெறும் அளவிற்கு காயங்கள் இல்லை என்றால் சரியல்ல. காயப்பட்ட நபர் எடுத்த சிடி ஸ்கேனில் Pansinusitis என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Pansinusitis என்பது என்னிடம் சிகிச்சை பெற்ற நபரின் தலையில் உள்ள அனைத்து sinus குழிகளில் ஒரே நேரத்தில் ஏற்படும் வீக்கம் மற்றும் தொற்று ஆகும். இது சாதாரண sinus நோயை விட தீவிரமானது ஏன் என்றால், கண்ணுக்கு மேலும் கன்னங்கள், மூக்கு மற்றும் நெற்றி முழுவதும் வலி, அழுத்தம், தலைவலி நெரிசல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருக்கும். என்னிடம் சிகிச்சைக்காக வந்த நபர், ஏற்கனவே நோய் உடைய நபர் என்றாலும், அந்த நோயை பயன்படுத்தி, அவரின் எதிரிகளின் மீது வீண் பழி சுமத்த வேண்டும் என்பதற்காகவே என்னிடம் பொய்யான தகவல் சொல்லி, சிகிச்சை பெற்றார்

என்றால் சரியல்ல. என்னிடம் சிகிச்சை பெற்ற நபர் எவ்வளவு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றாலும், எந்த நோய்க்காக சிகிச்சை பெற்றார் என்ற விவரம் Discharge summary பார்த்தால் தெரியும். என்னிடம் இருக்கும் ஆவணங்களை தற்போது, பார்த்தபோது, எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடு உடன் கூடிய காயச்சான்று வழக்கிற்காக காவல் துறையினரால் என்னிடம் கேட்டு பெறப்பட்டது என்றாலும், நான் மேற்சொன்ன தேதியில் காயப்பட்ட நபரை பரிசோதித்து, காயச்சான்று வழங்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.